சுருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – புதிதாக சீரமைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு 45 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(பக3(2)த் துறை

அரசாணை (நிலை) எண். 249

நாள் 29.11.2018
விளம்பி, கார்த்திகை 13
திருவள்ளுவராண்டு 2049
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வித் (வரவு செலவு) துறை, நாள் 18.05.2018,
2. அரசாணை (நிலை) எண்.108, பள்ளிக்கல்வித் (பக4(1)) துறை, நாள் 28.05.2018
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 37633/ சி2/இ1/ 2018, நாள் 14.06.2018.

--*--

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து பள்ளிகளையும் திறம்பட ஆய்வு செய்யவும், அரசின் நலத்திட்டங்களை உருவாக்கி மாணவ, மாணவியர்களுக்கு கொண்டு சேர்க்கவும், ஆசிரியர்களின் குறைகளை தீர்க்கவும், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கல்வி அலுவலர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர் ஆகிய பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, மாவட்டக் கல்வி அலுவலர் என்ற பெயரில் செயல்பட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 52 சீரமைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்கள் புதிய இடத்தில் செயல்பட அரசு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அரசால் புதிதாக சீரமைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் நிர்வாகப் பணிகளை கவனிக்கும் பொருட்டு மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடம் மற்றும் பணியாளர்கள் பணியிடங்களை பணி நிரவல் மூலம் ஒதுக்கீடு செய்து சீரமைக்கப்பட்ட புதிய மாவட்டக் கல்வி அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், புதியதாக சீரமைக்கப்பட்ட கல்வி மாவட்ட அலுவலகங்களில் பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்படாத நிலையில், தமிழக அரசின் விலையில்லா திட்டங்கள் நிறைவேற்றுவது, பள்ளிகளின் ஆண்டாய்வின் போது மாணவ / மாணவிகளின் சேர்க்கை விவரத்தை ஆய்வு செய்வது மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் ஆய்வுப்பணிக்கு உதவி செய்வது போன்ற செயல்பாட்டிற்கு பள்ளித்துணை ஆய்வாளர் பணியிடம் மிக அவசியமானது என்பதாலும், மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர் நடத்திடும் ஆய்வுக் கூட்டங்களுக்கு பள்ளித் துணை

ஆய்வாளர்களின் பங்களிப்பு தேவை என்பதினாலும் பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படுவது அவசியமாகிறது என்று தெரிவித்துள்ளார். எனவே, புதிதாக சீரமைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில், 45 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாத நிலையில், அந்த 45 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு, 45 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்களை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடமும், பட்டதாரி ஆசிரியர் பணியிடமும் ஒத்தப்பணியிடம் என்பதாலும், இவ்விரு பணியிடங்களுக்கும் ஒத்த ஊதிய விகிதம் என்பதினாலும், அரசிற்கு எவ்வித கூடுதல் செலவினமும் ஏற்படாது என்பதால், நிர்வாக நலன் கருதி மேற்காண் புதிதாக சீரமைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் 45 பள்ளித்துணை ஆய்வாளர் பணியிடங்களை அனுமதிக்கலாம் என்றும், அவ்வாறு அனுமதிக்கப்படும் பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்களில் தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களை கொண்டு நிரப்பிக்கொள்ளவும் அரசின் ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசுப் பள்ளிகளில் 01.08.2017 நிலவரப்படி, ஆசிரியரின்றி உபரி என கண்டறியப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு கொண்டுவரப்பட்டதில், 45 பணியிடங்களை அரசுக்கு சரண் செய்து அதற்கு ஒத்தப்பணியிடமான 45 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடத்தினை தோற்றுவிக்கலாம் எனவும், இவ்விரு பணியிடங்களும் ஒத்தப் பணியிடமாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும், 45 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடம் தோற்றுவிக்க அரசுக்கு சரண் செய்யப்படும் பள்ளிக் கல்வி இயக்குநர் தொகுப்பில் ஆசிரியரின்றி உபரியாக உள்ள 45 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் சரண் செய்யப்படும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு பள்ளிகளில் உபரி என கண்டறியப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடத்திற்கு ஒத்த பணியிடமாக வகைப்படுத்தப்பட்ட நிலையில், பள்ளிக் கல்வித் துறையில் புதிதாக சீரமைக்கப்பட்டுள்ள மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டிய இணைப்பு–I இல் உள்ள 45 அலுவலகங்களுக்கு இணைப்பு–II இல் குறிப்பிடப்பட்டுள்ள 45 உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் சரண் செய்து அதற்கீடான அதே ஊதியத்தில் (நிலை–16 குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,400/– (ரூ.36,400 – 1,15,700)) 45 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 – ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொதுப் பள்ளிகளின் ஆய்வு – 01 சம்பளங்கள்,"

[த.தொ.கு. 2202 02 101 AA 0104]

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத்துணை பணியாகும்". இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ–1)த் துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து

முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963—ன் இணைப்பில் உள்ள படிவம் ''அ''—வின்படி இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொ—1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018—19ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொ—1)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. பள்ளிக் கல்வித் துறையின் நிர்வாக சீரமைப்பு தொடர்பாக கூடுதல் பணியிடங்கள் / புதிய பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்க வேண்டிய நிலை எழவில்லை என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதால், இனி கூடுதல் / புதிய பணியிடங்கள் கோரக்கூடாது எனவும் அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை பெற்று அதன் கோப்பு எண். 58039/கல்வி—II/ நாள் 27.11.2018 / அ.சா.எண்.60852/மை.ம.ஆ.பி/2018, நாள்.28.11.2018—ல் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2039 (இரண்டு ஆயிரத்து முப்பத்து ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை—6.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை—18.
அனைத்து மாவட்ட சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.

**நகல்**
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள
அனைத்து துறைத் தலைவர்கள்.
நிதித்(கல்வி—II)/வரவு செலவு பொது(I&II )/மை.ம.ஆ.பி) துறை,
சென்னை—9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை—9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
அலுவலகம், சென்னை—9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை —9.
பள்ளிக் கல்வி (அநமு/வரவு—செலவு)துறை,
சென்னை—9.
இருப்பு கோப்பு / உதிரி நகல் .

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண்.249, பள்ளிக்கல்வி(பக3(2))த்துறை, நாள் 29.11.2018.

**இணைப்பு – I**

**துணை ஆய்வாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் மாவட்ட கல்வி அலுவலகங்களின் விபரம்**

| S.No. | NAME OF THE REVENE DISTRICT | NAME OF THE EDUCATIONAL DISTRICT | NO.OF POST TO BE SANCTIONED |
|---|---|---|---|
| 1 | CHENNAI | CHENNAI CENTRAL | 1 |
| | | CHENNAI WEST (New) | 1 |
| 2 | TIRUVALLORE | AVADI (NEW) | 1 |
| | | AMBATTUR (NEW) (IAS) | 1 |
| 3 | KANCHEEPURAM | MADURANTHAGAM (NEW) | 1 |
| 4 | VELLORE | ARAKONAM (NEW) | 1 |
| 5 | TIRUVANNAMALAI | ARANI (NEW) | 1 |
| 6 | CUDDALORE | CHIDAMBARAM (NEW) | 1 |
| 7 | VILLUPURAM | KALLAKURICHI | 1 |
| | | THIRUKOVILUR (NEW) | 1 |
| | | CHENGI (NEW) | 1 |
| 8 | THANJAVUR | KUMBAKONAM | 1 |
| | | ORATHANADU (NEW) | 1 |
| 9 | THIRUVAUR | TIRUVARUR | 1 |
| | | MANNARKUDI (NEW) | 1 |
| 10 | NAGAPATTINAM | SEERGAZHI (NEW) | 1 |
| 11 | THIURCHIRAPALLI | MUSIRI | 1 |
| | | MANAPARAI (NEW) | 1 |
| 12 | PERAMBALUR | PERAMBALUR | 1 |
| | | VEPPUR (NEW) | 1 |
| 13 | ARIYALUR | UDAYARPALAYAM | 1 |
| | | CHENDURAI (NEW) | 1 |

| | | | |
|---|---|---|---|
| 14 | KARUR | KULITHALAI (NEW) | 1 |
| 15 | PUDUKOTTAI | ELUPUR (NEW) | 1 |
| 16 | DHARMAPURI | PALAKODU (NEW) | 1 |
| 17 | KRISHNAGIRI | HOSUR | 1 |
| | | MATTHUR (NEW) | 1 |
| 18 | NAMAKKAL | THIRUCHENKODU (NEW) | 1 |
| 19 | SALEM | MECHERRI (NEW) | 1 |
| 20 | ERODE | BHAVANI (NEW) | 1 |
| | | PERUNDURAI (NEW) | 1 |
| 21 | COIMBATORE | PERURUR (NEW) | 1 |
| 22 | TIRUPPUR | PALLADAM (NEW) | 1 |
| | | THARAPURAM (NEW) | 1 |
| 23 | THE NILGIRIES | GUDALUR | 1 |
| 24 | DINDIGUL | VATHALAKUNDU (NEW) | 1 |
| 25 | MADURAI | THIRUMANGALAM (NEW) | 1 |
| 26 | THENI | UTHAMAPALAYAM | 1 |
| | | THENI (NEW) | 1 |
| 27 | VIRUDHUNAGAR | SIVAKASI (NEW) | 1 |
| 28 | SIVAGANGAI | THIRUPATHUR (NEW) | 1 |
| 29 | RAMANATHAPURAM | MANDAPAM (NEW) | 1 |
| 30 | THOOTHUKUDI | TIRUCHENDUR (NEW) | 1 |
| 31 | TIRUNELVELI | SANKARANKOVIL (NEW) | 1 |
| 32 | KANYAKUMARI | THIRUVATTAR (NEW) | 1 |
| | | **Total** | **45** |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண்.249, பள்ளிக்கல்வி(பக3(2))த்துறை, நாள் 29.11.2018.

## இணைப்பு – II

**சரண் செய்யப்படும் உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் விபரம்**

| Sl.No | Dist Name | School Name | Subject |
|---|---|---|---|
| 1 | Salem | GHS Thamaiyanur | MATHS |
| 2 | Salem | GHSS Salem (Girls) | MATHS |
| 3 | Salem | GHSS Mallur | MATHS |
| 4 | Salem | Mpl HSS Pavadi (Girls) | MATHS |
| 5 | Salem | GHSS Chinnappampatti | MATHS |
| 6 | Salem | GHSS Chettimankurichi | MATHS |
| 7 | Salem | GHSS Madhanaickanpatti | MATHS |
| 8 | Salem | GHSS Sankari (Girls) | MATHS |
| 9 | Salem | GHS Kamalapuram | SCIENCE |
| 10 | Salem | GHSS Malliakarai | SCIENCE |
| 11 | Salem | GHSS(Boys) Attur | SCIENCE |
| 12 | Salem | GHSS Kannakurichi | SCIENCE |
| 13 | Salem | GHSS Singipuram | SCIENCE |
| 14 | Salem | GHSS Belur (Girls) | SCIENCE |
| 15 | Salem | GHSS(Girls) Salem | SCIENCE |
| 16 | Salem | Mpl HSS (Boys) Ammapet | SCIENCE |
| 17 | Salem | GGHSSTharamangalam | SCIENCE |
| 18 | Salem | GGHSS Idappadi | SCIENCE |
| 19 | Salem | GHSS Vellalapatti | SCIENCE |
| 20 | Salem | GHSS Attur (Girls) | SCIENCE |
| 21 | Salem | GHSS Gangavalli(Girls) | SCIENCE |
| 22 | Salem | GHSS Chettimankurichi | SCIENCE |

| | | | |
|---|---|---|---|
| 23 | Salem | GHSS Vanavasi | SCIENCE |
| 24 | Salem | GHSS Kaveripuram | SCIENCE |
| 25 | Salem | GBHSS Jalagandapuram | SCIENCE |
| 26 | Salem | GHSS Siruvachiyur | SCIENCE |
| 27 | Salem | GHSS Pannapatti | SCIENCE |
| 28 | Salem | GGHSS Magudanchavadi | SCIENCE |
| 29 | Salem | GHSS Chettimankurichi | SCIENCE |
| 30 | Salem | GHSS Deviakurichi | SCIENCE |
| 31 | Salem | GBHSS Pethanaickanpalayam | SCIENCE |
| 32 | Salem | GHS Valayamadevi | SOCIAL SCIENCE |
| 33 | Salem | GHS Theevattipatti | SOCIAL SCIENCE |
| 34 | Salem | Mpl HSS Pavadi(Boys) | SOCIAL SCIENCE |
| 35 | Salem | GBHSS Jarikondalampatti | SOCIAL SCIENCE |
| 36 | Salem | GHSS Kalpaganur | SOCIAL SCIENCE |
| 37 | Salem | GHS V. Mettupalayam | SOCIAL SCIENCE |
| 38 | Salem | GHSS VELLALAGUNDAM | TAMIL |
| 39 | Salem | GHSS MUTHUNAICKENPATTI | TAMIL |
| 40 | Salem | GGHSS ELAMPILLAI | TAMIL |
| 41 | Salem | GHSS VELLALAPATTI | TAMIL |
| 42 | Salem | GBHSS JALAGANDAPURAM | TAMIL |
| 43 | Salem | GHSS KARUPPUR | TAMIL |
| 44 | Salem | GHSS VANAVASI | ENGLISH |
| 45 | Salem | GBHSS ELAMPILLAI | ENGLISH |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.